# THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

## MCOP.No.31 /2019

Deposition of RW2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 27.03.2024

Evidence Recorded Time: 1.40 P.M to 1.50 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | எமர்சியாமேரி | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | பெப்பின் மகிமை | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை:-**

நான் மேல்கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க ஆஜராகியுள்ளேன். 23.07.2017 அன்று நடைபெற்ற டிஎன் 74கே3939 என்ற மகேந்திரா வாகனத்தின் உரிமையார் நான் என்றால் சரிதான். விபத்து நடந்த தேதி மற்றும் விவரங்கள் நேரில் தெரியுமா என்றால் நேரில் தெரியாது பின்னர் கேட்டு தெரிந்து கொண்டேன். மகேந்திரா வேண் என்ன வகையான வாகனம் என்றால் பள்ளி மாணவர்களை அழைத்து சென்று வீட்டிற்கு விடும் வாகனம் ஆகும். விபத்து சமயத்தில் வண்டியை ஓட்டிய ஓட்டநர் பெயர் அரோக்கியசாமி என்றால் சரிதான். அவர் அந்த சமயத்தில் எங்களிடம் இருந்த டிரைவர் உடல் நிலை சரியில்லாமல் இருந்ததால் ஆரோக்சியசாமி என்னிடம் டிரைவர் வேலை பார்த்தார் என்றால் சரிதான். ஓட்டுநருக்கு முறையாக ஓட்டுநர் உரிமை இருந்ததா என்றால் வைத்திருந்தார். அவரிடம் வணிக ரீதியான வாகனம் ஓட்ட பேட்ச் அணிந்திருந்தரா என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி வாகனத்தை பள்ளி குழந்தைகளை ஏற்றி செல்ல உரிமை பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். பாலிசி விதிமுறைகளை மீறி வாகனத்தை இயக்கி உள்ளேன் என்றால் காரணத்தினால் நஷ்ட ஈட்டை பகர பொறுப்பு அடிப்படையில் நானும் வழங்க வேண்டும் என்றால் அவ்வாறு இல்லை. காப்பீடு உள்ளதால் அவர்கள் தான் தரவேண்டும்.

**குறுக்கு விசாரணை:-** வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/-RW2

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.